# மாவட்டசட்டப் பணிகள் ஆணைக்குழு, விழுப்புரம்

## மாண்புமிகு தலைவர் / முதன்மை மாவட்ட நீதிபதி அவர்களின் செய்திக் குறிப்பு

மாண்புமிகு தலைவர் / முதன்மை மாவட்ட நீதிபதி, மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, விழுப்புரம் அய்யா அவர்களின் உத்தரவின்படி மற்றும் மாண்புமிகு தேசிய சட்டப் பணிகள் ஆணைக்குழு புதுதில்லி அவர்களின் வழிகாட்டுதலின்படி தேசிய சட்ட சேவைகள் 30-ம் ஆண்டை முன்னிட்டு வழக்கறிஞர்கள், சட்ட தன்னார்வத் தொண்டு உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொள்ளும் மாபெரும் புகைப்படம் மற்றும் கலை கண்காட்சி நடைபெற உள்ளது. இதில் தேசிய சட்ட சேவைகள் தினத்தை நினைவு கூறும் விதமாகவும் நீதிக்கான அணுகலை மேம்படுத்துவதில் தேசிய சட்டப் பணிகள் ஆணைக்குழுவின் 30 ஆண்டுகால சேவையை குறிக்கும் விதமாகவும் தேசிய சட்டப் பணிகள் ஆணைக்குழு "அனைவருக்கும் சமமான நீதி : சட்ட உதவியின் பார்வை" என்ற தலைப்பில் தேசிய புகைப்படம் மற்றும் கலை கண்காட்சி ஏற்பாடு செய்கிறது. இந்த முயற்சியின் நோக்கம் நீதிக்கான அணுகலை மேம்படுத்துவதில் சட்ட உதவி பங்கை ஆக்கபூர்வமான வெளிப்பாடு மூலம் எடுத்துக்காட்டுவதும் சட்ட சேவைகளால் பயனடைபவர்களின் வாழ்க்கை யாதார்த்தங்களை பற்றி சமூகத்திற்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதுமாகும்.

வழக்கறிஞர்கள், சட்ட தன்னார்வத் தொண்டு உறுப்பினர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் தங்கள் முயற்சியில் அன்றாட போராட்டங்கள், மீள்தன்மை மற்றும் சட்ட உதவியால் செயல்படுத்தப்படும் அதிகாரம் அளித்தல் கதைகள் போன்று புகைப்படங்கள் ஓவியங்கள் வீடியோக்கள் சமர்ப்பிக்க வேண்டும். தாங்கள் சமர்ப்பிக்கும் வீடியோக்கள், புகைப்படங்கள், ஓவியங்கள் அனைத்தும் இந்த ஆண்டு புது டெல்லியில் நடைபெறும் தேசிய கருத்தருங்கத்தில் 2025 நவம்பர் 8 மற்றும் 9-ஆம் தேதிகளில் தேசிய சட்ட சேவைகள் மாநாட்டில் காட்சிப்படுத்தப்படும்

ஆகவே, அனைவரும் தங்கள் வீடியோக்கள், புகைப்படங்கள், ஓவியங்களை மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் மின்னஞ்சல் முகவரி

vpmdlsa@gmail.com க்கு October 7, 2025 தேதிக்குள் PDF, JPG Format and MP4 Format –ல் அனுப்பி வைக்க வேண்டுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும் தகவல்களுக்கு மாவட்ட நீதிமன்ற இணையதள முகவரியை பார்வையிடவும் https://viluppuram.dcourts.gov.in/#notification

.......ஓம்,,,,,,

செயலாளர்/முதுநிலை சிவில் நீதிபதி,
மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,
விழுப்புரம்.